# கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - இரத்மலான

**01.** **தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி (கற்புல செவிப்புல) தரம் III**
**சம்பள அளவுத்திட்டம்** U-MT I (III) - ரூ. 31,625 – 07x300; 10x355 - 37,275 மாதாந்தம்

**ஆகக்குறைந்த தகைமைகள்:-**
**வெளிவாரி வகுதி**

(i) ஏதாவது ஒரு பிரிவில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ii) (a) மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவகத்தில் அல்லது பாராளுமன்றம் நிறைவேற்றிய ஒரு சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள ஒரு நியதிச்சட்ட நிறுவனத்தில் பொருளியல் மற்றும் தொலைத்தொடர்பாடல்/இலத்திரனியல்/பல்லூடகம் அல்லது கட்புல செவிப்புல தொழில்நுட்பங்கள் விடயத்தில் N.V.Q மட்டம் 5 இற்கு குறையாத மட்டத்தில் தகுதிச்சான்றிதழை பெற்றிருத்தல்.

அல்லது

(b) புகழ்பெற்ற ஒரு நிறுவனத்தில் கட்புல செவிப்புலப் பணியில் ஒரு வருட கால அனுபவத்துடன் மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த (ii) (a) இல் உள்ள மேற்குறித்த தகைமைகளுக்கு சமனாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பொருளியல் மற்றும் தொலைத் தொடர்பாடல்/இலத்திரனியல்/பல்லூடகம் அல்லது கட்புல செவிப்புலத் தொழில்நுட்பங்கள் பிரிவில் தொழில்நுட்பத் தகைமைகளை பெற்றிருத்தல்.

**உள்வாரி வகுதி**

(i) மேற்குறித்த வெளிவாரிப் பரீட்சாத்திகளுக்கு தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்வாரி பரீட்சாத்திகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தேர்ந்தெடுக்கப்படும் முறை:- ஒரு பொது உளர்சாப்புப் பரீட்சை மற்றும்/அல்லது செயல்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.**

- ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு மற்றும் பொது அறிவு
- விடய அறிவு

* வினாப்பத்திரங்கள் ஆங்கில மொழியில் காணப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்**

1. இலங்கைப் பிரஜையாகவும் சிறந்த நற்குணமுடையவராகவும் இருத்தல்.

2. தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களாவர். இவர்கள் தமது மாதாந்த சம்பளத்தில் 10% வீதத்தை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். மேலும் தொழில்தருநர் இவர்களின் சம்பளத்தில் மொத்தம் 15% வீதத்தை அந்த நிதியத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டத்தினது ஏற்பாடுகளின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பல்கலைக்கழகம் ஊழியர்களின் சம்பளத்தில் மூன்று (3%) வீதத்தை பங்களிப்பு செய்யும்.

3. நியமனம் பற்றிய ஏனைய நிபந்தனைகள் 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் அவ்வப்பொழுது மேற்கொள்ளப் படும் ஏதாவது திருத்தங்களுக்கும், கட்டளைகளுக்கும், துணை சட்டங்களுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும், விதிமுறைகளுக்கும் இணங்க காணப்படும்.

4. பல்கலைக்கழகங்களில்/நிறுவகங்களில்/அரசாங்கத் திணைக்களங்களில்/கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

5. நேர்முகப் பரீட்சைக்கு பரீட்சாத்திகளை பட்டியல்படுத்தும் உரிமையும் அதிகாரமும் பல்கலைக்கழகத்திற்கு உரியதாகும்.

6. பிறப்புச்சான்றிதழ்கள், கா.பொ.த. (சா/த), கா.பொ.த. (உ/த) சான்றிதழ்கள், அனுபவம் பற்றிய ஏனைய உரிய சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

7. KDU இணையத்தளத்திலிருந்து கீழிறக்கம்செய்யக்கூடிய மாதிரிப் படிவத்தை பெற்று விண்ணப்பிக்குமாறு விண்ணப்பதாரர்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர். உரிய திகதிக்கு பிந்திக் கிடைக்கும் மற்றும் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும், குறித்த மாதிரிப் படிவத்தையும் மேலேவுள்ள

04 ஆம் பந்தியில் காணப்படும் நிபந்தனைகளையும் அனுசரிக்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் **"பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலான"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.